# அனைத்துலகச் சைவ மாநாடு - 2016

## "சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும்"

# ஆய்வடங்கல்

**ISC**
**2016**

பெப்ரவரி - 12,13,14 - 2016
இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

முதலாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2016
ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

திரு. ப. கணேசலிங்கம்

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்

கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்

திரு. ச. முகுந்தன்

திரு. ச. பத்மநாபன்

திரு. பொ. சந்திரசேகரம்

திரு. சி. ரமணராஜா

திரு. தி. செல்வமனோகரன்

திரு. க. கந்தவேள்

**பொறுப்புக்கூறல்**

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

# திருமந்திரம் கூறும் அரசியற் சிந்தனைகள்

சி.ரமணராஜா

**ஆய்வுச் சுருக்கம்**

*சமுதாயத்தின் இயக்கத்திற்கு இன்றியமையாதனவாக உள்ள சமூக அமைப்புக்களில் அரசியல் அமைப்பான அரசு என்பதும் முக்கிய அங்கமாக விளங்குகிறது. சமூகவியல் மற்றும் சமூக தத்துவவியற்புலங்களில் அரசு என்னும் அரசியல் அமைப்புப் பற்றிய விரிவான ஆய்வுகள் காணப்படுகின்றன. பண்டைக்காலத்தில் மக்கள் நலச்சார்புடைய சிந்தனையாளர்கள் பலரும் சமயம் சார் பின்னணியில் அறவொழுக்கத்தை மையப்படுத்தி அரசு (அரசியல் அமைப்பு), அரசாங்கம் (நிர்வாக அமைப்பு) பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளனர். சமயங்களானவை மக்களின் வாழ்வியலை அறமுறையில் நிலைப்படுத்தவே முயன்றுவருகின்றன. குறிப்பாக இந்துசமயப்புலத்தில் எழுந்த எண்ணற்ற இலக்கியங்களும், அவற்றின் ஆக்க கர்த்தாக்களான சமயப்பெரியவர்களும், அறிஞர்களும் இத்தகைய வாழ்வியலுக்கு வேண்டிய உபாயங்களைக் கூறியிருக்கின்றனர். இச்சிந்தனையில் சைவ இலக்கிய வரலாற்றில் திருமூலருக்கும் அவரது படைப்பாக்கமான திருமந்திரத்திற்கும் தனித்துவமான இடமுண்டு.*

*அரசியல் மற்றும் அதனோடிணைந்த பொதுச்சிந்தனைகள் பற்றி புராதன இந்துக்கள் பல்வேறான கருத்துக்களைக் கொண்டிருந்ததனைப் போன்று திருமூலரும் அரசன், நாடு, மக்கள், நல்லாட்சி முதலியன பற்றி 'இராசதோட(ஷ)ம்' என்னும் பகுதியில் விளக்கியிருக்கின்றார். இதனடிப்படையில் தோத்திரம், சாத்திரம் என்னும் இருநிலைப் பண்பினையுடைய திருமந்திரத்தில் சமயத்தின் அடிப்படையில் கூறப்பட்ட மக்கள் நலனோன்பும் அரசியல் சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய முயல்கிறது.*

**திறவுச்சொற்கள் :** திருமந்திரம், அரசியல் சிந்தனைகள், அரசு, நாடு, மன்னன், அரச நீதி, மெய்த்தண்டம்.

**அறிமுகம்**

அரசியற் சிந்தனைகள் மனித வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு இன்றியமையாதனவாக உள்ளன என்பதனை வரலாற்றுப் பதிவுகளும் நிகழ்வுகளும் எடுத்துரைப்பதனூடாக அறிந்து கொள்ள இயலும். அரசு தோன்றிய காலம் முதல் இன்றுவரை மனிதன் அரசியல் உணர்வுகளால் உந்தப்பட்டவனாகவும், மக்கள் நலமான வாழ்வினை மேற்கொள்ள வேண்டும், அவர்களது வாழ்வு செழிப்புற எவ்வாறான செயற்பாடுகளை அரசு முன்னெடுக்க வேண்டும், ஆள்பவனின் குண நலன்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைப் பற்றி சிந்திப்பவனாகவும் இருந்து வந்துள்ளான். பண்டைய இந்துக்கள் பலரும் இச்சிந்தனைகளை வேறுபட்ட வடிவங்களில் தெளிவுபடுத்தியுள்ளனர். சமகால நெறியில் அரசியல், பொருளாதாரம், சமூகம், அறவியல், அறிவியல் மற்றும் கல்விசார் சிந்தனைகள் தனித்தனித் துறைகளாகக் கட்டமைக்கப்படுவதற்கு பலநூறாண்டுகளுக்கு முன்னதாகவே சமயம்சார் சிந்தனைகளோடு இத்துறைகள் பிணைப்புற்றிருந்தன. சமூக நிறுவனங்களான குடும்பம், திருமணம். கல்வி, அரசு, பொருளாதாரம் முதலியனவற்றில் சமயத்தின் செல்வாக்கு பரந்தளவில் நிறைந்திருந்தது. 'சமயமில்லாத சமூகம் பயன்பாடற்றது' என்ற முடிவு அச்செல்வாக்கினால் உணரப்படுகிறது.

திருமூலர், மக்கள் நலனோன்பும் அரசியல் முறைமையையும், அதனோடு இணைந்த பொதுச் சிந்தனைகளையும் சமயம் சார் நிலையில் சிறப்பாக எடுத்து விளக்கியிருக்கிறார்.

விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். ksramanan30@gmail.com

### ஆய்வின் அவசியம்

திருமந்திரம் கூறும் அரசனின் இயல்புகளையும், கடமைகளையும் பற்றியறிய முயலும் இவ்வாய்வானது, திருமந்திரத்தை சாஸ்திரம், மற்றும் தோத்திரம் என்னும் தன்மைகளைக் கடந்து மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்கு அவசியமாக அமைகின்ற அரசியல் சிந்தனைக ளையும் தெளிவாக அறிந்து கொள்ள உதவும் என்னும் அடிப்படையில் இவ்வாய்வு அவசியமா கின்றது. அரசனின் கடமை என்பது நிர்வாக, இராணுவக் கடமை மட்டுமல்லாமல் அறவி யலின் அடிப்படையில் மக்களை கருத்தியல் ரீதியாக ஒன்றுபடுத்துவதுமாகும். அறநெறிகளின் நியதிப்படி மனித குலம் ஒன்றித்து நின்று வாழ்வதனை உறுதிப்படுத்துவதே அரசியலின் நோக்க மாகும். அந்த உயர்நோக்கமே அரசியல் தொண் டுக்கு வழிசமைக்கிறது.

### ஆய்வு முறையியல்

சமயவியல் அடிப்படையிலும் அரசியல், பொருளாதார அடிப்படையிலும் இந்த ஆய்வு நிகழ்த்தப்படுவதனால் இலக்கிய விபரண ஆய்வு முறையியல் முறையைப் பின்பற்றிச் செல்கிறது. திருமந்திரத்தில் கூறப்பட்ட அரசியல் பற்றிய எண்ணக்கருவையும் அதனோடிணைந்த பொதுச் சிந்தனைகளையும் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருமூலர் அருளிய திருமந்திரத்தை ஆய்வுப்பகுதியாகவும், அந்நூலிலுள்ள அரசியல் சிந்தனைகளை வரையறையாகவும் கொண்டு இவ்வாய்வு நிகழ்த்தப்படுகிறது.

### திருமந்திரமும் - அரசியல் எண்ணக்கருவும்

திருமூலரால் அருளிச்செய்யப்பட்ட திருமந்திரமானது பன்னிரு திருமுறை வைப்பில் பத்தாம் திருமுறையாக இடம்பெற்றுள்ளது. மூலன் உரை செய்த மூவாயிரந்தமிழ் எனவும், புத்திமுடிவது மூவாயிரத்திலே எனவும், தந்திரம் ஒன்பது சார்பு மூவாயிரம் சுந்தரனாகமம் சொல்மொழிந்தானே எனவும் திருமந்திரத்தில் சுட்டித்துக் கூறப்பட்டிருப்பினும் மூவாயிரத்திற்கும் அதிகமான பாடல்களைக் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. திருமந்திர மாலை, மந்திரமாலிகை, தமிழ் மூவாயிரம், சுந்தரனாகமம், தமிழாகமம் என வழங்கப்படும் இந்நூலானது தோத்திர நூல் வைப்பில் இடம் பெற்றாலும் சாத்திரத் தன்மையுடன் விளங்கும் சிறப்புமுடையது. ஒன்பது ஆகமங்களின் பெயரால் ஒன்பது தந்திரங்களாகவும், சமயவியல், தத்து வவியல், அறிவியல், அறவியல், வாழ்வியல், உளவியல், உயிரியல், அன்பியல், அருளியல், யோகம், குருபாரம்பரியம், முதலிய பல பகுதிகளை உடையதாகவும் இந்நூல் கட்டமைக்கப் பட்டிருக்கிறது.

திருமூலர் அரசர்கள், அரசியல் தர்மம், அதன் பொது நெறிகள் என்பன பற்றிக் கூறியுள்ளார். முதலாம் தந்திரத்திலுள்ள 'இராசதோக்ஷம்' என்னும் பகுதியில் மேற் போந்த சிந்தனைகள் காணப்படுவதனை இக் கட்டுரை ஆராய முயல்கின்றது. இத் தொடர் இராசன், தோக்ஷம் என்னும் இரு வட மொழிச் சொற்களால் ஆனது. இராசன் என்பது மன்னனையும், தோக்ஷம் என்பது குறை(Fault), பாவம்(Sin), பிணி(Disease) என்னும் பொருள்களையும் சுட்டித்து நிற்கிறன.[1] இராசதோக்ஷம் எனும் இச்சொல் நேரடியாக அரசாட்சி முறை என பொருள் தராது விடினும் நாடாளும் வேந்தனுக்கு குறைகள், பாவங்கள், பிணி முதலியன ஏற்படாது இருப்பதற்கான உபாயங்களையே விளக்குவதாக உள்ளது. இதனடிப்படையில் திருமந்திரம் 'இராசதோக்ஷம்' எனும் பகுதியில் 'நல்ல அரசாட்சி முறை' என்பதனை சிறப்பாக விளக்குகின்றது எனலாம். சுருங்கக் கூறின் திருமூலர் இராசனுக்கு ஏற்படுகின்ற தோக்ஷம் பற்றி எடுத்துரைப்பதன் மூலம் சிறந்த நல்லாட்சியை விரும்பியிருக்கின்றார் எனக் கருதலாம்.

மக்களின் சமூக வாழ்வியலில் அரசியல் என்பது இன்றியமையாத பங்கினைக் கொண்டதாக காலந்தோறும் இருந்து வந்துள்ளது என்ற யதார்த்த பூர்வமான சிந்தனையில் அவர்களின் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புக்களில் எழுகின்ற பல்வேறு பிரச்சினைகளும், தீர்வுகளும் அரசியலுடன் பிணைப்புற்றிருக்கின்றன. சமகாலத்தில் அரசியல் விஞ்ஞானம் (Political Science)என்ற பெயரால் 'அரசியல்' எனும் சொற்பதம் சுட்டப்படுவதனால் விஞ்ஞானத் துறைகளில் ஒன்றாக அத்துறை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

காலந்தோறும் நிகழ்ந்த விஞ்ஞான வளர்ச்சியில் மெஞ்ஞானச் சிந்தனைகள் அளப்பரிய பங்கினை ஆற்றியுள்ளன. குறிப்பாக இந்து சமய இலக்கியங்களுக்கு இவ்வரிய சிறப்புண்டு. வேதங்கள், மகா பாரதம், இராமாயணம், ஸ்மிருதிகள், சுக்கிரநீதி, அர்த்தசாஸ்திரம் முதலிய இலக் கியங்களில் கூறப்பட்டுள்ள அரசியல் சிந்தனைகள் நவீன அரசறிவியல் சிந்தனைகளோடு ஒத்துப்போகின்றன. அர சாட்சி மக்கள் நலனோன்பும் வகையில் அற வழியிலமைய வேண்டும் எனும் தன்மை இவ்விலக்கியங்களில் விளக்கப்பட்டுள்ளன. ஜனநாயக அரசொன்றிற்கு இருக்க வேண்டிய பண்புகளாக தற்காலத்தில் அழுத்தப்படுகின்ற கருத்தியல் சிந்தனைகளை இவ்விலக்கியங்கள் தமது அரசியல் பொருண்மையாகக் கொண் டுள்ளன. இத்தகைய எண்ணக்கருக்களை திருமந்திரம் பத்துப்பாடல்களினூடாக வெளிப்படுத்தியுள்ள தன்மையினை இங்கு நோக்குவது சிறப்பாகும்.

**அரசு-அரசன்**

அரசு என்பது சமுதாயத்தின் ஒரு முக்கியமான அங்கமாக விளங்குகிறது. சமூகவியல் அறிஞர்கள் உட்பட பலரும் 'அரசு' எனும் பதத்தை விளக்க வேறுபட்ட கருத்துக்களை வழங்கியுள்ளனர். விரிவஞ்சி அவற்றைத் தவிர்த்தல் இங்கு சாலப் பொருத்த மானதாகும். அரசாங்கம் அல்லது மன்னரின் ஆட்சி (Governance) முறையே அரசு என்றும், தங்கள் குலவழியாக நாட்டினை ஆளும் உரிமை பெற்றவனே அரசன் (Monarch, King) என்றும் கூறலாம்.[2] பிரமன், இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்னி, வருணன், குபேரன் ஆகிய இவர்களுடைய கூறுகளாகப் படைக்கப்பட்டவனே அரசன் என்றும், தீயாரை ஒறுத்தல், ஈதல், காத்தல், வேட்டல், அறநெறி பிறழாது பொருளீட்டல், மிறைகோடல், பகைவரைத் தொலைத்தல், மேன்மேல் நிலங்கொளல் ஆகிய எட்டுத் தொழில்கள் இவனுக்குரியன என்றும் அபிதான சிந்தாமணி[3] கூறுகிறது.

அரசனும் அவனுக்குரிய அரச உறுப்பு களுமே அரசு என வழங்கப்படுகிறது. அரசனுக்கு உரியனவாக படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு அங்கங் கள் கூறப்பட்டுள்ளன.

"படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்
ஆறும்உடையான் அரசருள் ஏறு"[4]

என்று வள்ளுவர் எடுத்தாள்வதும் இத னையே. இவற்றுடன் பகை என்பதனையும் அரசனுக்குரிய அங்கமாக அர்த்தசாஸ்திரம் எடுத்தாள்கின்றது. தற்கால சிந்தனையாளர்கள்,

- பொதுமக்கள்
- நிலவியல் ரீதியாக குறிப்பிட்ட பரப்பளவு
- நிர்வாகம் அல்லது அரசாங்கம்
- தனியுரிமையாட்சி அல்லது இறையாண்மை

எனும் நான்கு முக்கிய அம்சங்களை அரசு எனும் அமைப்பிற்குரிய குணநலன்களாக எடுத்தாள்கின்றனர்.

அரசனே நாட்டை ஆளுகின்றான். ஆகவே, ஆட்சியின் நோக்கம் ஒழுங்கினை நிலை நாட்டுவதே ஆகும். அறம், பொருள், இன்பம் என்பன மனிதனுக்குரிய உறுதிப் பொருட்களாகும். நல்ல அரசாட்சி என்பது

இத்தகைய புருடார்த்தங்களின் இருப்புக்கு மிக அவசியமாகும். இதனால் திருமூலர் அரசனுக்கு தோஷம் அல்லது குறைகள் ஏற்படாத வகையில் அரசனுக்குரிய சிறப்பான இயல்புகளை எடுத்துக் கூறி நல்லாட்சிக்கு அத்திவாரமிடுகின்றமை நோக்குதற்குரியது.

அரசு என்றால் சமூகத்தின் ஒழுங்கு. அதை அரசு உண்டாக்கவில்லை. ஆனால் அதை நிலை நாட்டவே அரசு ஏற்பட்டது. அரசன் தனது அதிகாரத்தை நிலை நாட்டவே வழிவகுப்பான். எந்த ஒழுங்கை நிலை நாட்ட அரசனுடைய அதிகாரம் அவசியமாகிறதோ அந்த ஒழுங்கைப் பாதுகாக்கும் ஓர் ஒழுக்க முறையை அவனே வகுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையில் அரசன் சுய அதிகாரம் உடையவனென அர்த்தசாஸ்திரம் கருதுகிறது. ஆட்சியின் நோக்கம் ஒழுங்கை நிலை நாட்டுவது,அந்த நோக்கம் நிறைவேற எந்த வழியையும் பின்பற்றலாமென்பதே அர்த்தசாஸ்திரத்தின் கருத்தாகும்.[5]அரசனுடைய சுகம் பிரஜை களுடைய சுகத்திலே தங்கியள்ளது. அவர்களு டைய நன்மையிலேயே அரசனுடைய நன்மை தங்கியள்ளது. தன்னுடைய மகிழ்ச்சியே அரசனுக்கு நன்மை தருவதன்று. குடிகளின் பிரியமே அவனுக்கு நன்மை தருவது எனும் இக் கருத்தினை அர்த்தசாஸ்திரம்,

"ப்ரஜாசுகே சுகம் ராஜ்ஞ: ப்ரஜானாம்சஹிதேஹிதம்
நாத்மப்ரியம்ஹிதம் ராஜ்ஞ: ப்ரஜானாம்துப்ரியம்
ஹிதம்."[6]

என எடுத்தாள்கின்றமையைக் காணலாம்.

அரச நீதி பற்றிய சிந்தனையில் அர்த்த சாஸ்திரம் கூறும் ஆட்சியின் நோக்கம் திரு மந்திரத்தில் கட்டமைக்கப்பட்டிருப்பினும் அர்த்தசாஸ்திரம் போன்று விரிவான அரசாட்சி முறையினைத் திருமந்திரம் கொண்டி ருக்கவில்லை. ஆயினும் பத்துப் பாடல்களில் சமூகநல அரசு பற்றிச் சிந்தித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அரசன் இயல்பாகவே சிந்திக்கும் ஆற்றலுடையவன். அத்தகைய சிந்தனைகள் மக்கள் நலச்சார்புடையனவாக விளங்குதல் அவசியமாகும். குடிமக்களின் பொருளாதாரம், கல்வி, பாதுகாப்பு உட்பட அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவது அரசின் பிரதான கடமையாகும். ஆகவே அரசு குடி மக்களின் நலனுக்கான அமைப்பு என்பது திருமூலரின் சிந்தனையாகும்.இவ்வாறான பண்பினையுடைய அரசை வழிநடத்த நல்ல தலைவன் (அரசன்) வேண்டும் எனும் முக்கிய கருத்தினை மையக்கருவாகக் கொண்டு திருமூலர் அரசனுக்குரிய நியமங்களை கூற விளைந்துள்ளார் எனக் கருதமுடிகிறது.

திருமூலர் காலத்தில் முடியாட்சி ஒன்றைத் தவிர பிறவற்றைச் சிந்திக்க வேண்டிய தேவை எழவில்லை. அதனால் 'அரசன்' என்றே கூறிச் செல்கிறார். முடிக்கு உரியவரை அரசன்[7], மன்னவன்[8], மன்னன்[9], காவலன்[10], வேந்தன்[11] எனும் சொற்களால் சுட்டி நிற்கின்றார். அரசனுக்குக் கூறப்பட்ட அனைத்து விடயங்களும் தற் காலத்தில் ஆட்சித் தலைவனுக்கு பொருந் துவனவாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**நாடு**

அரசியல் ஆராய்ச்சியில் நாடு ஓர் உறுப்பாகக் கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட நிலவரை (Territory) உடையது நாடாகும். அரசாட்சிக்கு நாடு எனும் நிலப்பரப்பு இன்றியமையாத உறுப்பு என்ற கருத்து பண்டைய இந்திய அரசியற் சிந்தனையாளர்களிடையே உரு வாகியிருந்தது. ஆனால் இன்றைய அரசியல் சிந்தனையாளர்களிடத்தே அரசுக்கு நாடு எனும் நிலவரை இன்றியமையாதது என் றும், இன்றியமையாததல்ல என்றும் இருவேறுவிதமான கருத்துகள் காணப் படுகின்றன. நாடில்லாத அரசை நிர்வகிப்பது பாத்திரங்களின்றி சமையல் செய்ய முயற்சிப்பதற்கு ஒப்பாகும். ஆயின் இறுக்கமான ஒரு அரசாட்சிக்கு நாடு எனும் உறுப்பு இன்றியமையாதது என்பது புலனாகிறது.

திருமூலரும் நாடு பற்றிய சிந்தனையில் மன்னவன் நாடு[12] என்று குறிப்பிட்டுள்ளார். ஆறாம் வேற்றுமைத் தொகையாகிய இத் தொடர் மன்னனுடைய நிலம் அல்லது மன்னனுடைய நாடு என்று பொருள் படுகின்றது. ஆகவே மன்னனுடைய ஆட்சிக்கு நாடு என்னும் உறுப்பு அல்லது ஆள்நிலம் உண்டு என்பதனையும் அரசுக்கு நாடு அவசியமானது என்பதனையும் இச்சொல் உறுதிசெய்கின்றது. திருக்குறளிலும் 'நில னாள்பவன்'[13] எனும் தொடரால் இவ் வியல்பு எடுத்தாளப்பட்டிருக்கின்றது. இங்கு ஆளும் நிலம் இன்றியமையாததல்ல எனில் நிலனாள்பவன் என எடுத்தாளப்பட்டிருக்க மாட்டாது என்பது சிந்திக்கற்பாலதாகும்.

அரசனால் ஆளப்படுவது நாடாகும்.இந்நாடு கெடாதவகையில் ஆட்சி புரிவது அரசனின் தலையாய கடமையாகும். இக் கருத்தினை திருமூலர் பின்வருமாறு எடுத்தாள்கிறார்.

"நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தோறும் நாடி யவன்நெறி நாடானேல்
நாள்தோறும் நாடு கெடுமூட நண்ணுமால்
நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே"[14]

இப்பாடலில் 'அவன்நெறி' என்று உரைத் தமையானது அரசனுடைய நெறியினை, அரசநீதியைச் சுட்டி நிற்கின்றது எனலாம். அரசநீதி இல்லாதவிடத்து நாடும், செல்வ மும் (பொருளாதாரம்) கெட்டுவிடும், அரசனும் பதவியிழந்து விடுவான் என்று அறிவுறுத்துகிறார். எனவே அவன்நெறி என்பதனூடாக செங்கோன்மையான நாடு, செங்கோன்மையான அரசு என்பதனை கட்ட மைத்திருக்கின்றார் எனலாம்.

திருமந்திரத்தில் நாடு என்பது புவி[15], ஞாலம்[16], உலகம்[17] எனும் சொற்களால் சுட்டுணர்த்தப்படுவதனையும் அவதானிக்க லாம். புவி, உலகம், உலகு, ஞாலம், என்னும் இச்சொற்கள் ஆகுபெயராக மக்களின் கூட்டத்தை அல்லது சமூகத்தை உணர்த்து கின்றன எனலாம்.

**அரசனின் தகுதிப்பேறுகள்**

வடமொழிச் சாஸ்திரங்களானவை தங்கள் குலவழியாக நாட்டினை ஆளும் உரிமை பெற்றவனே ஆட்சிக்கு வர உரித்துடையவன் என்ற கருத்தினை முன்வைக்கின்றன. ஆனால் இவ்விலக்கியங்கள் சுட்டித்துக் கூறும் நியதிகள் எவற்றையும் திருமூலர் வகுத்திருக்கவில்லை. ஆயினும் மக்களால் விரும்பத்தக்கதான ஆட்சியினை செயல்நிலைப்படுத்துவதனையே ஆட்சியாளரின் தகுதிப் பேறாக திருமூலர் எடுத்தாள்கிறார்.

இராசதோக்ஷம் எனும் பகுதியின் முதற் பாடலிலேயே ஆட்சியாளருக்கு இருக்க வேண்டிய முக்கியமான அடிப்படைத் தகுதியாக 'கல்வி' என்பதனை எடுத்துக் கூறியுள்ளார். பிரபஞ்ச நியதிகள் மற்றும் அரச நீதிகளைக் கற்றல் என்பதே இதனால் வலியுறுத்தப்படுகின்றது. நீதி நூல்களைக் கற்றுக் கொள்ளாத அரசனைக் காட்டிலும் உயிரைக் கவருகின்ற காலன் மிக நல்லவன் என்ற கருத்தினை திருமூலர் ஒப்புவமையாகக் காட்டுகின்றார்.

"கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுக நில்லானே"[18]

என்று எடுத்தாண்டிருக்கின்றார்.
"...கல்லா மனித்தர் கயவர் உலகினில்
பொல்லா வினைத்துயர் போகம் செய்வாரே"[19]
எனவரும் கருத்தும் சிந்தனைக்குரியதாகும்.

அரச நீதிகளைக் கற்றுக் கொள்ளாத அரசனும், உயிர்களைக் கவர்ந்து செல் லும் காலனும் ஆகிய இவ்விருவரும் வன் செயலால் ஒருங்கொப்பார். ஆயினும் நீதி

நூல்களை அறிந்திராத அரசன் அறத்தின் பக்கம் நிற்கமாட்டான். ஆகையால் நல்லவர்கள் எக்காரணமுமின்றி அவனால் அல்லற்படுத்தப்படுவார்கள். ஆனால் இறையுணர்வு மிக்க சிவஞானிகளைக் காலன் நெருங்கமாட்டான். ஆகவே கல்லாத அரசனைக் காட்டிலும் காலன் மிகநல்லவன் என்ற கருத்து திருமந்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவரும்,

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு"[20]

என்று நிலனாளும் மன்னனுக்குரிய தகுதியாக கல்வியையும் எடுத்துக் கூறுகின்றமை ஒப்புநோக்கத்தக்கது.

**அரசநீதி**

அரசன் அறநெறி நின்று நீதிவழுவாது ஆட்சி செய்யும் செங்கோலனாக இருக்க வேண்டும். முறையான அரசாட்சியே அரசனை இறைநிலைக்கு இட்டுச்செல்லும் என்பதனை சமய இலக்கியங்கள் அழுத்தமாக எடுத்துரைத்துள்ளன. திருமந்திரமும் முறையான ஆட்சிக்கு வழிகாட்டியிருக்கின்றது. நாட்டில் வாழும் மக்கள், ஆட்சியாளரின் இருப்புத்தன்மை, பொருளாதாரம் முதலியன முறையான ஆட்சியினாலேயே தக்கவைக்கப்படுகின்றன. அரசனின் முறையான ஆட்சியினையே இராசநீதி வலியுறுத்துகிறது.

அரசநீதியைப் பின்பற்றி ஆட்சி செய்வது, மக்கள் தத்தமது சுயதரும வழியில் செயற்படுமாறு செய்வது ஆகியன அரசனுக்குரிய பிரதான கடமைகளாக கூறப்பட்டுள்ளன. நீதி என்பது வடமொழிச் சொல்லாகும். இச்சொல் கி.பி ஆறாம் நூற்றாண்டிலேயே தமிழ் மொழியில் இடம்பெற்றிருக்கிறது. 'நீ' என்னும் வினைச் சொல்லடியாக இச்சொல் பிறந்ததாகும். 'நீ' என்னும் அவ்வேர்ச் சொல்லிற்கு அழைத்துச்செல் (Lead), கொண்டுசெல் (Convey), நடத்து (Conduct), வழிகாட்டு (Guide), ஆட்சிசெய் (Govern), இயக்கு (Direct) என்னும் பல்வேறு பொருள்கள் வடமொழியில் வழங்கி வருகின்றன. இவ்வேர்ச் சொல்லடியாக அமையும் நீதி என்னும் பெயர்ச்சொல் இயக்குதல், வழி காட்டல், செயலாட்சி, நடத்தை, தகுதி, மரபொழுங்கு என்ற பல பொருள்களை உணர்த்துகிறது. மேலும் செயலின் நிகழ்நிலை, கொள்கைமுறை, முன்னுணர்மதி, அரசியல் அறிவுத்திறன், அரசியல் சூழ்ச்சித் திறன் என்னும் வேறு பல பொருள்களையும் அச்சொல் குறிக்கிறது.[21]

இதனால் நீதி என்னும் சொல் வடமொழியில் நடத்துதல், செலுத்துதல், இயக்குதல் என்ற பொருள்களில் முதலில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் பின்னர் உண்டான கருத்து வளர்ச்சிக்கு ஏற்ப அச்சொல்லின் பொருள் காலப் போக்கில் விரிந்தும் பரந்தும் வளர்ந்திருக்க வேண்டும் என்றும் தோன்றுகிறது. அவ்வாறு வளர்ச்சியுற்ற காலத்தில் 'நீதி' என்பது சிறப்பாக இராசநீதியைக் குறிக்கும் சொல்லாகக் கருதப்படலாயிற்று.[22]

அரசநீதி என்பதில் அரசனுக்குரிய கடமைகளே கூறப்பட்டுள்ளன. மக்களைக் காத்து முறையாக நீதி வழங்குபவனே சிறந்த ஆட்சியாளனாவான். தர்மத்தை நிலைநாட்டுவது மட்டுமன்றி பொருளளித்தல், மக்களுக்கு சிறப்பான பாதுகாப்பு வழங்குதல், தனது மக்களை அன்பு பாராட்டி நடாத்துதல், சமத்துவமான நீதி வழங்குதல் முதலியனவும் அரசனின் தலையாய கடமையாகுமென்று திருமூலர் குறிப்பிடுவதுடன், அவற்றை நிறைவு செய்வோனே சிறந்த அரசனென்றும் எடுத்துக் காட்டுகிறார்.

தமிழகத்தில் சிறந்த ஆட்சித் துறைத் தலைவராக விளங்கிய இராஜகோபாலாச் சாரியார் நல்ல ஆட்சியாளருக்கு இருக்க வேண்டிய இலக்கணங்களாக கீழ்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார்.

- நற்குணம் நிறைந்தவராக இருக்க வேண்டும்.
- போதுமான ஆலோசனை கிடைக்க வல்லவராகவும் அவற்றை முறையாகப்பயன் படுத்தி நல்ல முடிவுகள் எடுப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
- தங்களிடம் பணியாற்றும் பணியாளர் களிடம் நம்பிக்கை கொண்டவராக இருத் தல் வேண்டும்.
- எடுக்கின்ற முடிவே இறுதி முடிவாக, உறுதியான முடிவு எடுக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- நிர்வாகத்தில் தங்களது அபிலாசைகளை நிறைவேற்றும் எண்ணமே வரக்கூடாது.
- நிர்வாகம் மக்களுக்காக பணியாற்றுகின்ற தென்பதனை தானும் தன்னுடன் பணி யாற்றக் கூடியவர்களும் உணரும் வகையில் செயற்பட வேண்டும்.

தற்காலத்தில் முன்வைக்கப்படுகின்ற மேற்போந்த கருத்தியல் சிந்தனைகளை அர்த் தசாஸ்திரம், காமாண்டக நீதி சாரம், திருக்குறள், மகாபாரதம், சுக்கிரநீதி, ஸ்மிருதிகள் முதலிய நூல்கள் ஆட்சியாளனுக்குரிய பண்புகளாக முறைப்படுத்தியிருக்கின்றன. குறிப்பாக அர்த்த சாஸ்திரம் இந்துக்களின் அரசியல், அரசாட்சி முறை, சட்டம், ஆட்சியாளனுக்குரிய பண்பு கள், நீதிபரிபாலனம், பொருளாதாரம், முதலியன பற்றிய தெளிவான சிந்தனைகளை ஆராய்ந்துள்ளது. இந்நூல் இத்தாலிய அரசியலறிஞரான மக்கியவெல்லி என்பவரின் இளவரசன் என்ற நூலுடன் ஒப்பிட்டுப் பேசப்படுகின்றது. மக்கியவெல்லியின் அரசியற் தத்துவ விளக்கத்திற்கான முன்னோடிச் சிந்தனைகளை கௌடில்யர் வழங்கியிருந்தார் என்பது மறுக்கவியலாத முடிபாகும்.

திருமூலரும் ஆட்சியாளனுக்குரிய பண்பு களை சமயம்சார் அடிப்படையில் மேல்வரும் வகையில் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

- அரசநீதிகளை கற்றறிந்தவனாக விளங்குதல் வேண்டும்.[23]
- தனது நாட்டில் பிறர்க்கென வாழும் பெரியோரின் தவநெறி ஒழுங்குற நிகழ் கின்றதா? என்பதனைக் கண்காணிப்ப வனாக இருத்தல் வேண்டும். அவ்வாறு நிகழவில்லையாயின் தன்பால் யாதேனும் குற்றமுள்ளதா என்று ஆராய்ந்து முடி வெடுப்பவனாக விளங்குதல் வேண்டும்.[24]
- தவக்கோலத்திற்குரிய தனிப்பெரு நெறியில் நிற்கும் ஆற்றல் இல்லாதவர் அத்தவக் கோலத்தினை மேற்கொள்வதனால் பயனில்லை.[25] இங்கு தவக்கோலம் என்பது துறைசார்ந்த பதவிகளைக் குறிக்கிறது எனக் கருதலாம்.
- உண்மைத் தவக்கோலத்தின் (துறைசார்ந்த பதவிகளில்) வழிநின்றொழுகாத தீய பண்பாளரை அத்தவ நெறியில் நிற்கச் செய்வதற்கு மன்னன் முயற்சிக்க வேண்டும். துறைசார்ந்த பதவிகளை நிர்வகிப்பதற்குரிய ஆளுமைகளை விருத்தி செய்வதற்கான தகுந்த பயிற்சிகளை வழங்குவதனூடாக அத்துறை சார்ந்தவர்களை உருவாக்குதல் வேண்டும் என்பது மேற்போந்த கருத்தி யலின் வெளிப்பாடாகும். அத்தகைய செயலூக்கமே நாட்டு மக்களுக்கும் மன்ன னுக்கும் நல்லின்பம் தரவல்லதாகும்.[26]
- யான், எனது என்னும் செருக்கினை உண்டாக்கும் ஆணவ இயல்பு கெடாதவர் கள் உயர்ந்த பதவிகளை வகித்து உலக மாந்தரை ஏமாற்றுவர். நாட்டு வளர்ச்சிக்கு ஆரோக்கியமற்ற ஊழல், இலஞ்சம் முதலிய தீமையான செயல்களையே ஊக்குவிப்பர். இதனால் உலக மாந்தரும், பெருவாழ்வு மன்னனும் துன்பத்தை அனுபவிக்க நேரிடும் என்கிறார் திருமூலர்.[27] இப் பதவிகளால் நன்மை இல்லை. ஆயின், அவ்வாறு ஏமாற்றுபவர்களின் பொய்மையை மெய்மையாளரைக் கொண் டாராய்ந்து அவர்களின் பதவிகளை மன் னன் பரீட்சித்துக் கொள்ள வேண்டும்.
- ஞானமில்லாதவர்கள் (தேர்ச்சியில்லா தவர்கள்) மெய்யுணர்ந்தவர்கள் (அனைத் தும் தெரியும் என நினைப்பவர்) போல

வேடமிட்டு நடிப்பர். அத்தகைய புல்லி யோரை ஆட்சியாளன் அத்துறையில் ஞான முடைய (தேர்ச்சியுடைய) ஞானிகளை (உத்தியோகத்தர்களைக்) கொண்டு பரிசோதித்தல் வேண்டும். அவர்களது கட்டளையின் படி ஆட்சியாளன் புல்லி யோரை தகுந்தவாறு கண்டித்தும், தண்டித்தும் நன்நெறியில் நிலைநிறுத்தல் வேண்டும்.[28] ஞானிகள் என்ற பதம் துறையில் தேர்ந்தவர்களை (competency consillors) உணர்த்திநிற்கிறது. தற்காலத்தில் உருவாக்கப்படுகின்ற வேறுபட்ட பல ஆணைக் குழுக்கள், அவர்களின் அறிக்கை கள், அவற்றைக் கொண்டு ஆட்சியாளன் எடுக்கும் சாதகமான, பாதகமான முடிவுகள் இத்திருமந்திரச் சிந்தனையுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

- அறத்தையும் அதன் வழி பொருள், இன்பங்களையும் நிலைநிறுத்திக் காத்தல் ஆட்சியாளனின் கடமையாகும். பசுக்கள், தாய்மையிற் சிறந்த பெண்கள், அறநெறி நிற்போர், தேவர்கள் போற்றுகின்ற சிவனடியார்கள் (திருவேடத்தார்) முதலி யோரைக் காக்கும் தலையாய கடமை ஆட்சியாளனுக்குண்டு. அஃதின்றேல் நாடு இருள் உலகத்தை அடையும் என எச்சரிக்கை செய்கின்றார் திருமூலர்.[29]
- அறநெறியிலமைந்த (செங்கோன்மை யானஅரசாட்சி) ஆட்சியினை மேற் கொள்ளுதல் வேண்டும். மன்னன் உல கினை நலமுறக்காப்பது மிகச் சிறந்த அறச்செயலாகும். தனது ஆட்சியின் கீழமைந்த உலகினை பிறர் அபகரிக்க வந்த பொழுது அதனைக் காத்துக் கொள்ளாதவனும், நாட்டிற்கு கேட் டினை உண்டாக்குபவனுமாகிய ஆட்சி யாளன், கொடு விலங்காகிய புலியினும் மிகக்கொடியவனாவான். குடியோம்புதலே மன்னின் தலையாய கடமை என வலி யுறுத்துகிறார்.[30]
- ஆட்சியாளனுக்கும், உலகுக்கும் பெருந் தீங்கினை ஏற்படுத்துபவர்களைதகுந்தவாறு தண்டஞ்செய்து நன்னெறிப்படுத்தல் அரசனின் கடமையாகும்.[31] தண்டம் என்பது நீதி முறையாகும். இதன் மூலம் மன்னன் குற்றத்தின் தன்மையினை நியாயித்து அறிந்து தீயவற்றைக் கடிந்து நல்லனவற்றை விரிவுபடுத்தி ஒழுங்கினை நிலைநிறுத்துபவனாகவும், சோர்வின்றிச் செயற்படுபவனாகவும் விளங்குதல் வேண்டும்.
- சமயங்கள் அனைத்தும் மாந்தர்களை பக்குவப்படுத்தும் கருவிசாதனங்களாக உள்ளன. ஒருவரோடு ஒருவர் இணங்கி வாழ்வதற்கான வழியை அவை ஏற் படுத்தியிருக்கின்றன. அதனால் ஒவ் வொருவரும் தத்தமது சமய நெறியில் நிற்றல் வேண்டும். அஃதின்றேல் பிறர் நல்வழிப்படுவதற்கும், தவறிழைத்தவர் திருந்திய வாழ்வினை மேற்கொள்வதற்கும் நீதி நூல் வழிநின்று மெய்மையான தண்டனையை அரசன் வழங்க வேண்டும். நடுவுநிலை நெறிநிற்றலே மன்னனது கடமையாகும். திருமூலர் நடுவுநிலைமை என்னும் தலைப்பில் இவ்வொழுக்கத்தின் அவசியத்தையும், அதனால் விளையும் நன்மையையும் தெளிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்
அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி"[32]

என்ற வள்ளுவரது நடுவுநிலைச் சிந்தனை ஒப்பிட்டு நோக்குதற்குரியதாகும். ஆகவே, சமயசமத்துவம், சமூகசமத்துவம் பேணுதல் என்பது ஆட்சியாளனுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாக் கடமையாகும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

சிவனால் தோற்றுவிக்கப்பட்ட நூல்களாகச் சிவாகமங்கள் எடுத்தாளப்படுகின்றன. சிவாகம நூல்வழி நின்றே அரசன் தத்தஞ் சமயம் சார்ந்து நில்லாதோரை தண்டனை செய்ய வேண்டும் என்கிறார் திருமூலர். இதனை "அத்தன் சிவன் சொன்ன ஆகமநூல் நெறி எத்தண்டமும்

செய்யும்.."[33] என்று எடுத்தாள்வதனால் அறியமுடிகிறது. ஆகவே சைவ ஆகமங்கள் நீதிநூலாகவும் விளங்குகின்றன என்பது புலனாகின்றது. இதன் வழி தமிழாகமமாகிய திருமந்திரமும் ஒரு நீதிநூலே என்பது அறியப்படுகிறது.

சைவசமயம் சார் அரசியற் சிந்தனைகளை திருமூலர் விளக்கியிருப்பினும், தத்தஞ் சமயத் தகுதி நில்லாதாரை மெய்த் தண்டம் செய்வது வேந்தன் கடனாகும்[33] எனக் கூறியிருப்பதும் நோக்குதற்குரியதாகும்.

**நிறைவுரை**

திருமுறை வைப்பில் பத்தாம் திருறையாக அமைந்துள்ள திருமந்திரம் தோத்திரம் மற்றும் சாஸ்திர ரீதியான பண்புகளைக் கடந்து அரசநீதிகளை விளக்கும் நூலென்பது புலப்படுகின்றது. திருமந்திரத்திலே கூறப்பட்டுள்ள அரசியல் சிந்தனைகளின் வழி பின்வரும் முடிவுகள் பெறப்படுகின்றன.

- புராதனகால அரசியல் நெறியைப் பின்பற்றி சமயம் சார் (சைவம்) அரசியல் சிந்தனையே இங்கு கூறப்பட்டுள்ளது.
- நல்லாட்சி அரசுக்கான சிந்தனை மன்னனின் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது.
- அரசன், அரசாங்கம் முதலியன மக்களின் பொதுத் தொண்டு நிறுவனங்களே தவிர ஆட்சியாளர்களுக்குரியதல்ல.
- பக்கச்சார்பின்றிய நடுவுநிலை மனப் பாங்கும், அதன் வழியமையும் மெய்த் தண்டமும் அரசனுக்கு கீர்த்தியைத் தரும்.
- அரசாட்சி மேன்மையுடையதாக விளங்குவதற்கு கற்றறிந்தோரை துணைக் கோடலும், அவர்களின் ஆலோசனை பெறுதலும் மன்னன் கடனாகும்.
- நாடாளும் அரசன் குடியோம்புதல், மக்களைப் பாதுகாத்தல், அறத்தை நிலைநாட்டுதல், தக்கவைத்தல், கொடையளித்தல். பொருளாதார விருத்தியினை மேம்படுத்தல் முதலான கடமைகளைச் சிறப்பாக ஆற்ற வேண்டும்.

ஆகவே, அமைதியான நல்லாட்சிக்கான வழிகாட்டி நூலாக விளங்கும் திருமந்திரமானது அறிவியல் சார்புச் சிந்தனைகளோடு கட்டமைக்கப்பட்டிருக்கின்ற நவீன அரசியல் சிந்தனைகளின் ஆரம்பக் கருத்துக்களையும் உட்கொண்டிருக்கிறது எனலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. **தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி,** ப. 593.
2. மேலது, பக். 56-57.
3. **அபிதான சிந்தாமணி,** ப. 98.
4. **திருக்குறள்,** 381.
5. நடராசன், சோ., (1967), **வடமொழி இலக்கிய வரலாறு செம்மொழிக்காலம்,** பக். 286 – 287.
6. இராமநாதன், விகரு., (ப.ஆ), (2014), **அர்த்தசாஸ்திரம் என்னும் சாணக்கியரின் நீதிநூல், மூலமும் உரையும்,** பக். 90-91.
7. ஞானசம்பந்தன். அ. ச., (ப.ஆ), 2004, **திருமூலநாயனார் அருளிய திருமந்திரம்,** பா. 238.
8. மேலது, பா. 239.
9. மேலது, பா. 241.
10. மேலது, பா. 243.
11. மேலது, பா. 240, 244, 245, 246, 247.
12. மேலது, பா. 239.
13. திருக்குறள், 383.
14. ஞானசம்பந்தன். அ. ச., மு.கு.நூ., பா. 239.
15. மேலது, பா. 241.
16. மேலது, பா. 244.
17. மேலது, பா. 245.
18. மேலது, பா. 238.

19. மேலது,பா. *314.*
20. திருக்குறள், *383.*
21. திருநாவுக்கரசு. க.த., *(1971),* **திருக்குறள் நீதி இலக்கியம்,** ப. *16.*
22. மேலது, ப. *16.*
23. ஞானசம்பந்தன். அ. ச., மு.கு.நூ. பா. *238.*
24. மேலது,பா. *240.*
25. மேலது,பா. *240.*
26. மேலது,பா. *240.*
27. மேலது,பா. *241.*
28. மேலது,பா. *242.*
29. மேலது,பா. *243.*
30. மேலது,பா. *245.*
31. மேலது,பா. *241.*
32. திருக்குறள், *118.*
33. ஞானசம்பந்தன். அ. ச., மு.கு.நூ., பா. *247.*